2017 ஜூலை 18]

அனைத்து வசதிகளுக்கும் தேவையான இடம் அங்கே இருக்கின்ற காரணத்தினால், அரசு சார்பில் அந்த இடத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்றால், 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. உறுப்பினர் அவர்கள் இடமும், அதற்குத் தேவையான பல வசதிகளும் இருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். அவற்றை துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

குடமுழுக்கு

***1571—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, சோழமாதேவியிலுள்ள அருள்மிகு கயிலாயமுடையார் சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, சோழமாதேவி, அருள்மிகு கயிலாயமுடையார் சிவன் கோயில் என்றழைக்கப்படும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அருள்மிகு கைலாசநாதர் ஆலாண்டியம்மன் திருக்கோயில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அலுவலர்கள் மற்றும் கிராமத்தார்கள் அடங்கிய ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி, தொல்லியல் துறையின் ஆலோசனையின்படி திருப்பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதியில் உள்ள சோழமாதேவியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு கயிலாயமுடையார் சிவன் கோயில் ஏறத்தாழ 1,800 வருடங்கள் பழமையான கோயிலாகும். இராஜராஜ சோழனால் நிறுவப்பட்டது என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே குடமுழுக்கு செய்வதற்கான முயற்சிகளை சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் மேற்கொண்டிருந்தாலும், அங்கிருக்கின்ற இரு ஊர்களுக்கிடையே உள்ள சிறு, சிறு பிரச்சினைகளால் இப்பணி தடைபட்டுப்போனது. ஆகவே, அப்படிப்பட்ட நிலை மீண்டும் ஏற்படாமல், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய E.O., தலைமையிலோ அல்லது R.D.O., தலைமையிலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலோ ஒரு குழுவை உருவாக்க வேண்டும். இந்தக் கோயிலானது* State Archaeological Department*–ன்கீழ் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதன்படி, ஆய்வு செய்து, இந்த முறை எந்தத் தடையும் இல்லாமல் குடமுழுக்கு விழா நடைபெறுவதற்கு இந்த அரசு உதவி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இரு கிராமத்தார் உள்ளிட்ட அனைத்து நபர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட*

2017 ஜூலை 18]

ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்துவதற்காக, இரு குழுவினரிடமும் தனித்தனியாக, வெவ்வேறு கால இடைவெளியில் கருத்துகள் கேட்கப்பட்டதில், இரு குழுவினரும் எந்தவித உடன்பாட்டிற்கும் ஒத்துழைக்க மறுப்பு தெரிவித்துவிட்டார்கள். எனவே, மீண்டும், வருவாய்த் துறை, காவல் துறை மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் இரு கிராமத்தார் முன்னிலையில் கூட்டம் நடத்தி, இத்திருக்கோயில் குடமுழுக்கு விழா நல்ல முறையில் நடைபெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று மலைக் கோயில் என்ற ஒரு கோயில் இருக்கின்றது. அதை எறும்பீஸ்வரர் கோயில் என அழைக்கிறார்கள். அதை வைத்துதான் திருவெறும்பூருக்கு அந்தப் பெயரே, அதாவது திருவெறும்பூர் என வந்தது. அந்த எறும்பீஸ்வரர் கோயிலுக்கும் 18 வருடங்களுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றது. அதன்பிறகு இன்று வரை குடமுழுக்கு நடைபெறாமலே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், அந்தக் கோயிலைச் சார்ந்திருக்கின்ற தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள* compound *சுவர் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றது. அதைப்போன்று, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இருக்கின்றார், நாளையுடன் கூட்டத் தொடர் முடியும் நிலையில் உள்ளது. 10 நாட்களாகக் கட்சி வேறுபாடின்றி உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது;* service road*–க்காக. அனைத்துக் கட்சியினரும் அதில் கலந்து கொண்டு இருக்கின்றார்கள். ஏற்கெனவே, நான் கவன ஈர்ப்பாக கொடுத்திருக்கின்றேன். இருந்தாலும், இந்தக் கூட்டத் தொடர் நாளையுடன் முடிவடைவதால், உறுதியான, நம்பிக்கையான பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் நான் இந்த*

நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோயில், பழமை வாய்ந்த கோயிலாகும். இந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆய்வு மேற்கொள்வதற்காக தொல்லியல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீடு அங்கீகாரம் பெற்று வந்தவுடன், குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தெப்பக் குளத்தைச் சீர் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, விரைவில் பணி தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P. வெற்றிவேல் அவர்கள்.

திரு. P. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் பீலிகான் முனீஸ்வரர் கோயில் என்ற மிகப் பிரசித்திப் பெற்ற ஓர் ஆலயம் இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்பொழுதே 3 கோயில்களுக்கும் குடமுழுக்கு செய்ய உத்தரவிடப்பட்டது. இரண்டு, ஆர்.கே. நகர் தொகுதியிலும்; ஒன்று, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியிலும் என உத்தரவிடப்பட்டது. ஆர்.கே. நகர் தொகுதியில் உத்தரவிடப்பட்ட இரண்டு கோயில்களுக்கும் குடமுழுக்கு முடிவடைந்துவிட்டன. இந்த பீலிகான் முனீஸ்வரர் கோயிலுக்கான குடமுழுக்கிற்கு எல்லா உத்தரவுகளும் பிறப்பித்த பின்பும் இன்னும் நடைபெறாமல் இருக்கின்றது. அதற்கு நிதியொதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

2017 ஜூலை 18]

அவர்கள் கோரிய திருக்கோயிலைப் புனரமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரிய நிலையில் உள்ளது. ஒப்பந்தம் பெறப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் விரைவில் குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நித்தம் நித்தம் போற்றும் எங்கள் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

"தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி செய்து வரும் எங்கள் கொங்கு நாட்டுச் சிங்கம் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும், எங்கள் கோவை மாவட்ட தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

இது பொதுவான கேள்வி. தமிழ்நாட்டில் வழிபடும் நாளான மகா சிவராத்திரி நாளை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முன்வருமா? ஏனென்றால், நாயன்மார்கள் பாடல்பெற்ற 266 தலங்களில், 265 தலங்கள் நம் தமிழ்நாட்டில்தான் உள்ளன. வைணவத் தலங்கள் மற்றும் இலட்சக்கணக்கான சிவாலயங்களும் நம் தமிழ்நாட்டில்தான் உள்ளன. அதைப்போல, 63 நாயன்மார்களும் தமிழ்நாட்டில்தான் அவதரித்தார்கள். இந்தியாவில் 15 மாநிலங்களில் அரசு பொது விடுமுறையாக இந்த நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அந்த நாளை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அம்மா அவர்களின்*

அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜகத்தினை ஆண்டு, எதிரிகளை வீழ்த்தி, பிரத்யங்கரா தேவியாக வாழ்ந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியையும், ஆட்சியையும் காப்பாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

சேலத்து சிங்கமாக வீறு கொண்டு எழுந்து, வெற்றிநடை போடும் எங்கள் அண்ணன் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

வீரபாண்டி தொகுதி, உத்தமசோழபுரம் ஸ்ரீகரபுரநாதர் ஈஸ்வரன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயில். இக்கோயிலில், முகூர்த்த நாட்களில் சுமார் 50 திருமணங்களுக்கு மேல் நடைபெறுகின்றன. கோயிலுக்கு வரும் திருமண வீட்டார்கள் குளியலறை, சுகாதார வளாகம் உள்ளிட்ட வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். இக்கோயிலில் குளியலறை, சுகாதார வளாகம் கட்டுவதற்கு போதுமான இடவசதி உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்கோயிலில் குளியலறை மற்றும் சுகாதார வளாக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கோயிலை ஆய்வு செய்து, அங்கு எத்தனை திருமணங்கள் நடைபெறுகின்றன என்பதைத் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும் என்பதை*

2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

220—

பெயர் மாற்றம்

***26746—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்மரபினர் வகுப்பினரை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா என்ற வினாவினை ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய தற்போதைய சூழ்நிலையில் வழிவகையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* British *காலத்திலிருந்து* Denotified Tribes *என்ற* certificate-*தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று*